பக்கங்கள்:-24

# காலை முரசு

| முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | தை 24 | சனிக்கிழமை | 21.02.2026 | அதிர்வு 205 |
|---|---|---|---|---|---|

## நாடு திரும்பினார் ஜனாதிபதி அநுர

இந்தியாவின் தலை நகர் புதுடில்லியில் நடைபெற்ற ‘AIImpact2026’ சர்வதேசமாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தனது உத்தியோகபூர்வ இந்தியப் பயணத்தை

05



# டில்லி பயணம் ஓகே... தேர்தல் எப்போது?

## ஜனாதிபதியிடம் எதிரணி கேள்வி

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தியாவுக்கு விஜயம் செய்து பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்து வருகின்றமை மாத்திரம் போதுமானதல்ல எனவும், நீண்ட காலமாக முடக்கப்பட்டுள்ள மாகாண சபைத் தேர்தலை அரசு உடனடியாக நடத்த வேண்டும் எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம். பி. தெரிவித்தார்.

06



# எட்டியாந்தோட்டையில் கோர விபத்து! மூன்று பிள்ளைகளின் தாய் உயிரிழப்பு!!

## பிள்ளைகள் தீவிர சிகிச்சைப் பிரிவில்

அவிசாவளை – ஹட்டன் பிரதான வீதியின் எட்டியாந்தோட்டை, தனகொலவத்த பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில், 46 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்விபத்தில் அவரது மூன்று பிள்ளைகளும் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை விமான

07






பத்துக் கட்டளைகள் (Ten Commandments) பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். பூர்வீக இஸ்ரேல் தேசத்திற்கு கடவுள் கொடுத்த சட்டங்கள் அவை என்று அறிந்திருக்கிறோம். சீனாய் மலையில் கடவுள் தன்னுடைய தீர்க்கதரிசியான மோசேயிடம் பத்துக் கட்டளைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதிக் கொடுத்தார் என்று விவிலியத்தில் கூறப்படுவதாக அறிகிறோம்.

இலங்கையின் ஆட்சியாளர்களுக்கு பௌத்த மத பீடத்தினர் இப்போது 10 கட்டளைகள் கொடுத்திருக்கிறார்கள் என்று செய்திகள் வெளியாகி உள்ளன.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள அனைத்து இலங்கை பௌத்த மகாசம்மேளன வளாகத்தில் நேற்று நடைபெற்ற பௌத்த மாநாட்டில் இலங்கை அரசாங்கத்துக்கு பத்து கட்டளைகள் அடங்கிய சங்கப் பிரகடனம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

பௌத்த மதத்திற்கும் மகா சங்கத்தினருக்கும் தற்போது விடுக்கப்படும் சவால்கள் குறித்து 06

# மாகாண சபை தேர்தல் தொடர்பாக ஆராயும் தெரிவுக்குழுவுக்கு உறுப்பினர்கள் நியமனம்

## தாமதித்து நடந்தாலும் வரவேற்கின்றோம் என்கிறார் சாணக்கியன்




மாகாணசபைத் தேர்தலை எந்த முறைமையின் கீழ் நடத்த வேண்டும் என்பது தொடர்பில் ஆய்வு செய்து பரிந்துரைகள் முன்வைப்பதற்காக விசேட நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்று அமைக்கப்பட்டுள்ளது.

கால தாமதமாகி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சாணக்கியன் வரவேற்றுள்ளார். இது தொடர்பில் நேற்று நாடாளு மன்றத்தில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

இந்த குழுவை அமைப்பதற்கான முதல் கூட்டம் கடந்த ஜனவரி 06ஆம் திகதி நடைபெற்றிருந்தது. எனினும், கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குப் பின்னரே குழு உறுப்பினர்களின் பெயர்கள் நியமித்து அறிவிக்கப்பட்டுள்ளன. முதல் கூட்டம் நடைபெற்ற நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய நிலையில், உறுப்பினர் நியமனத்தில் ஏற்பட்ட தாமதம் கவலைக்குரியது.

சில தினங்களுக்கு முன்பு மாகாண சபைகளுக்கான தேர்தல் முறைமையை ஆய்வு செய்ய மற்றொரு குழுவை நியமிக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டிருந்தது. அதற்கு எதிர்ப்பு தெரிவித்து நாங்கள் அதை முறியடித்ததன் பின்னரே இக்குழு இப்போது நியமிக்கப்பட்டுள்ளது. காலம் தாழ்தியாவது இக்குழுவுக்கு உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ளமையை வரவேற்கின்றோம். ஜனவரி மாதத்திலேயே குழு முறையாக நியமிக்கப்பட்டிருந்தால், இதுவரை அறிக்கை நாடாளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் இக்குழுவில் எனது பெயரும் முன்மொழியப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இக்குழுவில் மொத்தம் 12 உறுப்பினர்கள் இடம்பெற வேண்டும். எனினும், தற்போது தலைவர் உட்பட 11 உறுப்பினர்களே நியமிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் மாகாண சபைகள் தொடர்பான அமைச்சராக பணியாற்றிய பைசர் முஸ்தாபாவை பன்னிரெண்டாவது உறுப்பினராக நியமிக்குமாறு சபாநாயகரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். - தெரிவித்தார்.



# மட்டக்களப்பில் மூவருக்கு மரணதண்டனை

(ஜலீல் ஜீ )

மட்டக்களப்பில் கொலை வழக்கில் மூன்று எதிரிகளுக்கு தூக்குத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரபாகரன்.

2015 ஆம் ஆண்டு ஜனவரி 22ஆம் திகதி இடம் பெற்ற விவசாயக் காணி தொடர்பான பிணக்கின் காரணமாக நாகப்போடி மகேஸ்வரலிங்கம் என்பவரை கொலை செய்தனர் என்ற அடிப்படையில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐந்து நபர்களுக்கு எதிராக சட்டமா அதிபரால் கடந்த 2020 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மேல் நீதிமன்றில் குற்றப் பகிர்வு பத்திரத்தை தாக்கல் செய்தார்.

அதில் இரண்டு சந்தேக நபர்கள் இறந்ததன் அடிப்படையில் எஞ்சிய மூன்று நபர்களுக்கு எதிராக வழக்கு நடவடிக்கை இடம்பெற்றது.

கடந்த ஐந்து வருடங்கள் இடம் பெற்ற வழக்கில் வழங்கப்பட்ட சாட்சியாங்களின் அடிப்படையில் மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி பிரபாகரன் நேற்று மூன்று எதிரிகளையும் குற்றவாளியாகக் கண்டு அறிவித்தமையுடன் ஜனாதிபதி குறிப்பிடுகின்ற தினத்தில் மரண தண்டனையை நிறைவேற்றுவதற்குப் பரிந்துரையும் செய்துள்ளார்.

இந்த வழக்கை சட்டமா அதிபர் சார்பாக அரச சட்டத்தரணி எம். ஏ. எம். லாபீர் நெறிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம்:

# காணி விடுவிப்பில் தொடரும் இழுபறி!

### ஆவணங்கள் இன்றி உரிமை கோரும் விகாராதிபதி

யாழ்ப்பாணம் – தையிட்டி திஸ்ஸ விகாரை விடயம் தொடர்பில், கொழும்பில் பேச்சுவார்த்தை இடம்பெற்ற நிலையில், காணிகளை விடுவிப்பதற்கு தொடர்ந்தும் இழுபறி தொடர்கின்றது.

பெரும் சர்ச்சைக்கு உரியதாக மாறியிருக்கும் திஸ்ஸ விகாரை விடயத்தில் தீர்வொன்றைக் காண்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு முயற்சித்து வருகின்றது. இதற்காக பௌத்த சாசன அமைச்சக அதிகாரிகள், அரச அதிகாரிகள், திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஆகிய தரப்புகளுக்கு இடையிலான கலந்துரையாடல் கொழும்பில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போதே, காணிகளை விடுவிப்பதற்குத் திஸ்ஸ விகாராதிபதி திட்டவட்டமாக மறுப்புத் தெரிவித்துள்ளார்.

திஸ்ஸ விகாரை விடயத்தில் மக்களின் காணிகளை மக்களிடமே வழங்க வேண்டும் என்று நயினாதீவு மற்றும் ஆரியகுளம் விகாராதிபதிகள் வலியுறுத்தி வரும் நிலையில், அவர்களும் பாதிக்கப்பட்ட மக்களும் அழைக்கப்படாமலேயே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

காணிகளுக்கு உரிய ஆவணங்கள் பொதுமக்களால் முறைப்படி வழங்கப்பட்ட போதிலும், திஸ்ஸ விகாராதிபதியால் இதுவரை முறையான ஆவணங்கள் எவையும் வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும், ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை விடுவிப்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் இல்லாமலேயே கலந்துரையாடல் நிறைவடைந்துள்ளது. அடுத்தகட்டக் கலந்துரையாடல் விரைவில் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# எம்மைப் புறக்கணித்து ஆக்கிரமிப்பாளர்களுடன் பேச்சா? பாரபட்சமாகச் செயற்படுகின்றது பௌத்தசாசன அமைச்சு

### தையிட்டி காணி உரிமையாளர்கள் குற்றச்சாட்டு




தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் பௌத்த சாசன அமைச்சு பாரபட்சமான முறையில் செயற்படுகின்றது என்று பாதிக்கப்பட்ட மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:–

“திஸ்ஸ விகாரைக்காக ஆக்கிரமிக்கப்பட்ட எமது காணிகளை எம்மிடம் மீள ஒப்படைக்குமாறு வலியுறுத்தி போராட்டங்களை நடத்தி வருகின்றோம். இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் கடந்த புதன்கிழமை பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது. ஆனால், எமக்கு அழைப்பு விடுக்காமல் இந்தப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்துள்ளனர்.

எம்மிடம் இருந்து ஆவணங்களைப் பெற்றுள்ளனர். அந்தக் காணிகள் எம்முடையவை என்பதற்கு நாங்கள் அனைத்து ஆவணங்களையும் வழங்கியுள்ளோம். ஆனால், எமது கருத்துக்களைத் தெரிவிக்க இடம் வழங்கப்படாமல் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

எம்மை அழைக்காமல், எமது காணிகளை ஆக்கிரமித்த விகாராதிபதியை அழைத்துக் கலந்துரையாடல் நடத்துவது, அந்த ஆக்கிரமிப்புக்கு வழங்கப்பட்ட அங்கீகாரமாகவே நாங்கள் பார்க்கின்றோம்.” – என்றனர்.

# வடக்கு மாகாணத்தில் இன்று நிழல் அமைச்சர்களின் ஆட்சி!

## சபையில் கஜேந்திரகுமார் பகிரங்கக் குற்றச்சாட்டு

வடக்கு மாகாண சபை இயங்காமல் இருக்கின்ற நிலையில், மாகாண அதிகாரங்களுக்கு உட்பட்ட ஒவ்வொரு துறைக்கும் நிழல் அமைச்சர்களை நியமித்து ஆட்சி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"அமைச்சர்பிமல்ரத்நாயக்கஅண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார். இதன்போது, வடக்கு மாகாணத்தில் நிழல் அமைச்சர்களை நியமித்து அவர்கள் ஊடாக ஆட்சியைக் கொண்டு நடத்துமாறு அவர் வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகனுக்கு உத்தரவிட்டுள்ளார். இதை நான் பொறுப்புடன் கூறுகின்றேன்.

சுகாதாரத்துறைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜாவும், கல்வி அமைச்சுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரனும், மகளிர் விவகாரத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவனும், உள்ளூராட்சி சபைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரனும், விவசாயம் மற்றும் கால்நடைத் துறைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் திலகநாதனும் நியமிக்கப்பட்டுள்ளனர்.



வடக்கு மாகாணத்தில் சுகாதார அமைச்சு சார்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீபவானந்தராஜா அதில் அழைக்கப்பட்டிருந்தார். எந்த அடிப்படையில் அவரை அழைத்தீர்கள்? அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைத்திருக்க வேண்டும். அதைவிடுத்து, இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது மிகக் கேவலமான மனோநிலை.

வடக்கு மாகாண சபைக்கு எதிரானவர்கள் என்றும், அந்த நிர்வாகக் கட்டமைப்புக்கு எதிராகப் போராடி உயிர்த்தியாகம்கூட செய்தவர்கள் எனவும் கூறுகின்றீர்கள். ஆனால், அதே மாகாண சபைக் கட்டமைப்பில் திருட்டுத்தனமாக உங்களின் ஆட்களைப் புகுத்துகின்றீர்கள். இதுவொரு முதுகெலும்பில்லாத பண்பு. இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் என அரசைக் கோருகின்றோம்." – என்றார்.

# இராணுவத்தின் இன அழிப்பு முகத்தின் மற்றுமொரு கோரமே தையிட்டி விகாரை

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சாடல்

"இன அழிப்புப் போரில் ஈடுபட்ட இராணுவத்தின் கோரமுகமே தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரை. இந்த விடயத்தில் அரசு தலையிட்டு காணிகளை இழந்த மக்களுக்கு நீதியை வழங்க வேண்டும்."

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியதாவது:–

"தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரை தொடர்பில் கொழும்பில் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இந்தக் கலந்துரையாடலில், பௌத்த சாசன அமைச்சின் அதிகாரிகளும், அரச அதிகாரிகளும், திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியும் கலந்துகொண்டனர். ஆனால், காணிகளை இழந்த மக்கள் இதில் கலந்துகொள்ள அழைக்கப்படவில்லை. இது எந்த வகையில் நியாயம்?

தையிட்டி திஸ்ஸ விகாரைக்கும் அரசுக்கும் அல்லது பௌத்தத்துக்கும் தொடர்பில்லை. இராணுவமே இந்த ஆக்கிரமிப்பைச் செய்தது. அப்போதைய இராணுவத் தளபதி சவேந்திர சில்வாதான் இந்த விகாரையை அமைப்பதில் முழுமூச்சாகச் செயற்பட்டார். இன அழிப்பில் ஈடுபட்ட இராணுவத்தின் மற்றொரு கோர முகமே தையிட்டி திஸ்ஸ விகாரையாகும். எனவே, இந்த விடயத்தில் அரசு நீதியான முறையில் தலையிட வேண்டும்.



மக்களின் காணிகளை மக்களுக்கு வழங்குவதாகக் கூறிக்கொண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசு, இவ்வாறான மோசமான செயல்களுக்குத் துணைபோகக் கூடாது." – என்றார்.




# ஜோன்ஸ்டனுக்கும் புதல்வர்களுக்கும் மார்ச் 6 வரை விளக்கமறியல் நீடிப்பு!

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரது இரு புதல்வர்கள் மற்றும் மற்றுமொரு சந்தேகநபர் ஆகியோரை எதிர்வரும் மார்ச் மாதம் 6ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதே வேளை, இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்புடைய மற்றைய சந்தேகநபரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை, வத்தளை நீதிவான் நீதிமன்றத்தில் மேற்படி சந்தேகநபர்கள் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சராகப் பணியாற்றிய காலத்தில், லங்கா சதொச நிறுவனத்திற்குச் சொந்தமான லொறி ஒன்று முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் அவரின் இரண்டு புதல்வர்கள் உள்ளிட்ட 4 சந்தேகநபர்கள், நீண்ட நாள்களாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### அரச ஊழியர் ஓய்வூதிய விதிகளில் திருத்தம்:

# அமைச்சரவை அங்கீகாரத்துடன் புதிய சுற்றறிக்கை வெளியானது

அரச சேவையில் 2016 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதிக்குப் பின்னர் இணைந்த ஊழியர்களின் ஓய்வூதிய உரித்தை உறுதிப்படுத்தி, அரசாங்கம் புதிய சுற்றறிக்கையை வெளியிட்டுள்ளது.

2016.01.01 அன்று அல்லது அதற்குப் பிறகு நியமிக்கப்பட்ட ஊழியர்களுக்கான ஓய்வூதிய விதிகளைத் திருத்த அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பான 21/2017(I) இலக்க சுற்றறிக்கை பெப்ரவரி 18 அன்று வெளியிடப்பட்டது.




ஏற்கனவே, வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களை இந்தப் புதிய திருத்தத்திற்கு ஏற்ப திருத்தியமைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலங்களில் வழங்கப்படும் அனைத்து புதிய நியமனக் கடிதங்களிலும், அரசாங்கத்தின் கொள்கைப்படி இந்த ஓய்வூதியத் திருத்தம் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டும் என பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ். ஆலோகபண்டார உத்தரவிட்டுள்ளார்.

இந்த அறிவிப்பு 2016 இற்குப் பிறகு பணியில் சேர்ந்த ஆயிரக்கணக்கான அரச ஊழியர்களின் நீண்டகால கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் அமைந்துள்ளது.

## நாடு திரும்பினார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவு செய்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு நாடு திரும்பினார்.

ஜனாதிபதி தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் குழு, நேற்று இரவு 10.04 மணியளவில் புதுடில்லியிலிருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் நிறுவனத்தின் UL – 196 விமானம் மூலம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இந்த சர்வதேச மாநாட்டில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் எதிர்கால தாக்கம் மற்றும் இலங்கையின் டிஜிட்டல் பொருளாதார மாற்றங்கள் குறித்து ஜனாதிபதி முக்கிய உரையாற்றினார். அத்துடன், இப்பயணத்தின் போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட உலகத் தலைவர்களுடனும் அவர் இருதரப்பு உறவுகள் குறித்துக் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி உள்ளிட்ட தூதுக்குழுவினரை வரவேற்பதற்காகக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று இரவு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொதுமக்களை தெளிவுபடுத்தும் நோக்கில் என்ற பெயரில் நேற்று மகா சங்க மாநாடு நடைபெற்றது.

பௌத்த மகா சம்மேளன தலைமையகத்தில் இடம்பெற்ற அந்த மாநாட்டில் தற்காலத்தில் புத்த சாசன நிலை ஆராயப்பட்டது. பிக்குகள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சமூக நெருக்கடிகளைத்



தீர்ப்பதற்காக, நாட்டின் அனைத்துப் பிக்குகளும் பௌத்தத் தலைவர்களும் இணைந்து 'சங்கப் பிரகடனம்' ஒன்றை வெளியிட்டனர் என்று கூறப்பட்டது. அதன்படி, அந்தச் சங்கப் பிரகடனம் அனைத்து பிக்குகளினதும் கையொப்பத்துடன் ஜனாதிபதியிடம் கையளிக்கப் படவுள்ளதாக மொரட்டுவ, லுனாவ போதி ராஜாராம விகாராதிபதி, கொழும்புப் பல்கலைக்கழகத்தின் சிங்களத் துறைத் தலைவர் மகாச்சார்ய பூஜ்ய அகலகட சிறி சுமன தேரர் குறிப்பிட்டார்.

அந்தப் பத்துக் கட்டளைகளும் வருமாறு:-

# தேவனாம்பியதீசன் மன்னரின் காலம் முதல் இலங்கையின் அரசும் பௌத்த மதமும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டுள்ளன என்று நாங்கள் வலியுறுத்துகிறோம். அந்தத் தொடர்பின் மூலம் ஒழுக்க விழுமியங்களைக் கொண்ட தேசத்தைக் கட்டியெழுப்பும் பொறுப்பு ஆட்சியாளருக்கும் மதத்திற்கும் உரியது என்பதையும், பௌத்த போதனைகளின்படி அரசிற்கு ஆலோசனை வழங்கும் வரலாற்று ரீதியான கடமை பிக்குகளுக்கே உள்ளதென்ற உரிமையையும் அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

#பௌத்த மதமும் அதனுடன் இணைந்த அனைத்துக் கலாசாரங்களும் புனிதத் தலங்களும் பாதுகாக்கப்பட வேண்டும். 1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசமைப்புகளின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு நீதிமன்றத்தினால் வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ள இந்த அரசமைப்பு ரீதியான உரிமையை அரசாங்கம் பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

# தேசத்தின் ஒருமைப்பாடு, ஒற்றுமை அத்துடன் சகவாழ்வு என்பன வரலாற்று ரீதியாகக் கட்டியெழுப்பப்பட்ட இல்லறத்தாருக்கும் துறவியருக்குமான தொடர்பிலேயே தங்கியுள்ளன. சோழர்கள், மேற்கத்தையச் சதியாளர்கள் மட்டுமன்றி விடுதலைப் புலிகளால் கூட இந்தத் தொடர்பைச் சிதைக்க முடியவில்லை. பல்வேறு இயற்கை அனர்த்தங்கள், நோய்களைக் கட்டுப்படுத்த இந்தத் தொடர்பே காரணமாக இருந்தது. இதனை உடைப்




பதற்கும் முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதற்கும் சமூக ஊடகங்கள் உட்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கும் தூரநோக்கற்ற செயற்பாடுகளைத் தோற்கடிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# பண்டைய ஆட்சியாளர்கள் பௌத்த மதத்தின் மீது மிகுந்த நம்பிக்கையுடனும் கௌரவத்துடனும் செயற்பட்டனர். பௌத்தர்கள் அல்லாதோர் இலங்கையில் ஆட்சி செய்யக் கூடாதெனக் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளதால் அதை உறுதிப்படுத்த வேண்டும்.

# பௌத்த கல்வியின் தலைமையகமாக அநுராதபுர மகா விகாரை விளங்கியதுடன், அன்று முதல் பிக்குகளே நாட்டு மக்களின் பிரதான ஆசிரியர்களாகத் திகழ்ந்தனர். இதன் மூலம் ஒழுக்கமுள்ள ஒருமாணவர்சமூகம் உருவானது. உயர்தர இலக்கியக் கலைகளை நாட்டிற்கு வழங்கிய பிக்குகளின் கல்விப் பணியைப் போற்ற வேண்டும். வித்தியோதய, வித்தியாலங்கார பிரிவேனாக்கள் ஆரம்பிக்கப்பட்டு அதன் ஊடாகப் பல்கலைக்கழகங்கள் வரை இலங்கையின் பௌத்த கல்வி வளர்ச்சியடைந்த முறையை அடிப்படையாகக் கொண்டு, நவீன பிரிவேனா அத்துடன் பாடசாலைக் கல்வியைக் கட்டியெழுப்ப வேண்டும். பாடத்திட்ட மேம்பாட்டில் பௌத்த கல்வித் தத்துவங்களைக் கவனத்திற் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

# பண்டைய காலத்திலிருந்து புத்தர்


මහ සඟ සමුළුව

சிலையானது இலங்கையின் பௌத்த மக்களின் மிகுந்த கௌரவத்திற்குரிய புனிதப் பொருளாக இருந்து வருகிறது. சமாதி சிலை, அவுக்கன சிலை, கல்விகாரை போன்ற மாபெரும் படைப்புகளைப் பண்டைய மன்னர்கள் மக்களின் பக்தியை வளர்ப்பதற்காகவே பெரும் சிரமத்தின் மத்தியில் உருவாக்கினர். இன்றும் இந்த மத, கலாசார மரபுகள் போற்றப்படுகின்றன. எனவே, புத்தர் சிலைக்கு அவமதிப்பு ஏற்படும் வகையிலான எவ்விதச் செயற்பாடுகளையும் அரசாங்கமோ அல்லது ஏனைய சமூக நிறுவனங்களோ செய்யக்கூடாது என்பதையும், அதற்குத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறோம்.

# முன்னைய ஜனாதிபதிகளால் அமைச்சர் பதவி வகிக்கப்பட்டுச் செயற்படுத்தப்பட்ட புத்த சாசன அமைச்சு, தற்போது முறையான அமைச்சர் ஒருவர் இல்லாத காரணத்தினால் செயலிழந்து காணப்படுகிறது. அவ்வமைச்சு அத்துடன் பௌத்த விவகார திணைக்களத்திலிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ள வரும் பிக்குகளுக்கும் பௌத்த மக்களுக்கும் வினைத்திறனான சேவையை வழங்க அதிகாரிகள் தவறியுள்ளனர். எனவே, புத்த சாசன அமைச்சு அத்துடன் பௌத்த விவகார திணைக்களத்தை வினைத்திறன் மிக்க நிறுவனங்களாக மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# பௌத்தர்களின் பிரார்த்தனைக்கு அமைவான தர்ம(மான) அரசாட்சியை முன்னெடுக்க வேண்டும்.

# பௌத்த தொல்பொருள்கள், புனிதத் தலங்கள், விகாரைகள், தேவாலயங்கள் என்பன பிக்குகளின் தனிப்பட்ட சொத்துக்கள் அல்ல் அவை நாட்டின் தேசத்தின் பாரம்பரிய சொத்துக்களாகும். எனவே, அவற்றுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில் பாதுகாக்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு உண்டு என்பதை வலியுறுத்துகிறோம்.

# இலங்கையின் எந்தவொரு இடத்திலும் பிக்குகள் சீலப் பண்புகளைப் பேணி, கௌரவமான முறையில் மக்களது இம்மை, மறுமை நலன்களுக்காகப் பணியாற்றும் போது, அவர்களுக்கு நிந்தனை ஏற்படும் வகையில் கருத்துக்களை வெளியிடுதல், சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களால் அவதூறு செய்யப்படுதல், குற்றச்சாட்டுகளை முன்வைத்தல் போன்ற பிக்குகளின் கௌரவத்தைச் சிதைக்கும் செயற்பாடுகள் அரசாங்கத்தின் கீழ் நடைபெறக் கூடாதென வலியுறுத்துகிறோம்.

- இவையே அந்தப் பத்துக் கட்டளைகள்.

ஆக மீண்டும் முருங்கையில் ஏறுகின்றது வேதாளம். அநுர அரசுக்குக் காத்திருக்கின்றது நெருக்கடி என்பது நிச்சயமாகுகின்றது....!

# டில்லி பயணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து அவர் ஊடகங்களிடம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

"இலங்கையின் அண்டை நாடான இந்தியாவுடனான இராஜதந்திர உறவுகளைப் பலப்படுத்துவது மிகவும் அவசியமான ஒன்றாகும். அந்த அடிப்படையில் ஜனாதிபதியின் தற்போதைய இந்திய விஜயம் முக்கியத்துவம் பெறுகின்றது. எனினும், இத்தகைய உயர்மட்டச் சந்திப்புகள் வெறும் சம்பிரதாயபூர்வமான பேச்சுவார்த்தைகளுடன் மாத்திரம் சுருங்கிவிடக் கூடாது.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்தை உறுதிப்படுத்தும் வகையில் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்த வேண்டும் என்பதே இந்தியாவினதும், சர்வதேச சமூகத்தினதும் நீண்ட கால எதிர்பார்ப்பாக உள்ளது. தற்போது நீண்டகாலமாகச் செயலிழந்து காணப்படும் மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தி, நாட்டில் ஜனநாயகத்தை மீண்டும் நிலைநாட்ட வேண்டிய பாரிய பொறுப்பு தற்போதைய அரசாங்கத்திற்கு உண்டு.

எனவே, இந்தியப் பிரதமருடனான சந்திப்பின் போது எட்டப்பட்ட இணக்கப்பாடுகளுக்கு அப்பால், உள்நாட்டில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான ஆக்கபூர்வமான மற்றும் நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளை அரசு உடனடியாக முன்னெடுக்க வேண்டும்."

- என்றும் ரஞ்சித் மத்தும பண்டார எம். பி. வலியுறுத்தினார்.

## எட்டியாந்தோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையத்தில் இறக்கிவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த சுற்றுலா பஸ் ஒன்று, ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலிருந்த மின் கம்பத்துடன் மோதியுள்ளது. அதன் பின்னரும் வேகம் குறையாத பஸ், மின் கம்பத்தை உடைத்துக் கொண்டு வீதியை விட்டு விலகி அருகில் இருந்த வீடொன்றுக்கு அருகே கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

விபத்து இடம்பெற்ற சந்தர்ப்பத்தில், உயிரிழந்த பெண் தனது மூன்று பிள்ளைகளுடன்மாலைநேரவகுப்புக்குச்செல்வதற்காக வீதியோரத்தில் பஸ்ஸுக்காகக் காத்திருந்துள்ளார். இதன்போது கட்டுப்பாட்டை இழந்த பஸ் அவர்கள் நால்வர் மீதும் மோதி கவிழ்ந்துள்ளது.

இவ்விபத்தில்மேலாசதுராணிகுலதுங்க (வயது 46) என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார். இவரது கணவர் வெளிநாட்டில் பணிபுரிபவர் எனத் தெரியவந்துள்ளது. படுகாயமடைந்த மூன்று பிள்ளைகளும் கரவனெல்ல ஆதார வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பாக பஸ்ஸின் சாரதி எட்டியாந்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கரவனெல்ல வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை எட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# இன்று தாய் மொழி தினம்

உலகத் தாய்மொழி நாள் (International Mother Language Day) ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி 21 ஆம் திகதி - அதாவது இன்று - உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுகிறது.

தாய்மொழிகளின் முக்கியத்துவத்தையும் தனித்துவத்தையும் உணர்த்தவும், மொழி மற்றும் கலாசார பன்முகத்தன்மையை ஊக்குவிக்கவும் இந்த நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த ஆண்டு பன்மொழி கல்வியை வடிவமைப்பதில் இளைஞர்களின் பங்களிப்பை முன்னிலைப்படுத்தும் வகையில் இந்த சர்வதேசத் தினக் கொண்டாட்டங்கள் அமைகின்றன.

1952 ஆம் ஆண்டு அப்போதைய கிழக்கு பாகிஸ்தானின் (தற்போதைய வங்கதேசத்தின்), தலைநகர் டாக்காவில் வங்காள மொழியை ஆட்சி மொழியாக அறிவிக்கக் கோரி நடத்தப்பட்ட போராட்டத்தின் போது உயிர்நீத்த நான்கு மாணவர்களின் நினைவாக இந்நாள் உலகளாவிய முறையில் மொழி தொடர்பாக நினைவு கூரப்படும் சிறப்பு நாளாகக் கொண்டாடப்படுகிறது. வங்காள தேச அரசாங்கத்தின் முயற்சிகள், அனைத்துலக அமைப்புகளது ஆதரவுகள் காரணமாக ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெஸ்கோ அமைப்பினால்) 1999, பெப்ரவரி 21 அன்று பொதுமன்ற மாநாட்டின் 30 ஆவது அமர்வில் இந்நாளை அனைத்துலக தாய் மொழிநாளாக அறிவிக்கும் முடிவு எட்டப்பட்டது.

பல்வேறு சமூகங்களின் மொழி, பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேணுவதுடன் அவற்றுக்கிடையிலான ஒற்றுமையையும் உருவாக்கும் எண்ணத்தோடு 2000 ஆம் ஆண்டு முதல் இந்நாளானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது.

உலகில் உள்ள அனைத்து மொழிகளையும் பாதுகாத்தல், பன்மொழி கல்வியை ஊக்குவித்தல் மற்றும் அழிந்து வரும் மொழிகளை மீட்டெடுப்பது என்பன இந்தத் தினத்தை பிரகடனப்படுத்தி அனுஷ்டிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

மொழி என்பது வெறுமனே மனிதர்களின் கல்வி மற்றும் மேம்பாட்டுக்கு உதவும் தகவல் தொடர்புக் கருவி மட்டும் தான் என்று பலரும் நினைத்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் மொழி என்பது நம் பண்பாட்டு அடையாளம். இந்த உலகத்திற்கும் அதில் வாழும் மக்களுக்கும் மொழி என்பது ஒரு சமூகத்தின் குறியீடு. ஆனால், இன்றைய உலகமயமாதலினால் மொழிகள் அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்றன. அது மட்டுமல்ல, போகின்ற போக்கில் மொழிகள் பலவற்றின் தனித்துவம் அழிந்து, அவை மறைந்துபோகும் அபாயமும் உள்ளது. சிறு சிறு மொழிகள் மறைந்து போகும் என்றால், கலாசார பன்முகத்தன்மையும் வழக்கொழிந்து இல்லாமல் போய்விடும். மொழி அழிந்தால் மக்களின் பண்பாட்டு அடையாளம் அழியும். பண்பாட்டு அடையாளம் இல்லாத மக்கள், வரலாறு அற்றவர்களாகப் போவார்கள். ஒரு மொழி அழிக்கப்படுகின்றதெனில் அந்த மொழியை பேசுகின்ற சமூகத்தின் அடையாளங்கள் அழிக்கப்படும் முயற்சிகள் தொடங்கிவிட்டன என்பதே உண்மை.

உலக மொழிகளில் மூத்த மொழி நமது தமிழ். அதுதான் ஆய்வாளர்களின் முடிவு. அந்த வகையில் பார்த்தால் தாய்மொழிகளுக்கு எல்லாம் தாயானவள் தமிழ். அந்த மொழியின் மாந்தர்களாகிய நாங்கள் நம் தாய் மொழியைப் பேணிப் பாதுகாத்து, போற்றி, நிலை நிறுத்த இந்தத் தாய்மொழி தினத்தில் சங்கற்பம் செய்வோம்.

# தரமற்ற நிலக்கரி கேள்விப்பத்திரத்தால் 10,000 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது

## நாடாளுமன்றத்தில் டி.வி. சானக்க அம்பலம்



தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி செய்யப்பட்டமையினால் நாட்டிற்கு ஏற்பட்டுள்ள நட்டம் 10,000 கோடி ரூபா என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக்க நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தரம் குறைந்த நிலக்கரி இறக்குமதி தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஒத்தி வைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தரம் குறைந்த நிலக்கரிகேள்விப் பத்திரத்தை இரத்து செய்வதற்கு ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருக்குப் போதுமான ஏற்பாடுகள் இருந்தபோதிலும், அதனை இரத்து செய்யாமை பாரதூரமான விடயமாகும்.

ஒப்பந்தத்தின்படி இரண்டு நிலக்கரி கப்பல்கள் வராவிட்டால் அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. டிசம்பர் மாதம் ஒரு கப்பலும், ஜனவரியில் நான்கு கப்பல்களும் மட்டுமே வந்துள்ளன.

பெப்ரவரி மாதத்தில் இதுவரை நான்கு கப்பல்களே வந்துள்ளன. மொத்தம் 15 கப்பல்கள் வந்திருக்க வேண்டிய நிலையில் இதுவரை 8 கப்பல்களே வந்துள்ளன. இந்தக் கப்பல் தாமதத்தினால் மட்டும் நாட்டிற்கு 31 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

தரம் குறைந்த நிலக்கரி டெண்டர் காரணமாக இதுவரை 7,500 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதுடன், இது 10,000 கோடி ரூபா வரை அதிகரிக்கும்.

இந்த 10,000 கோடி ரூபா நட்டத்தை ஈடுகட்டவே மின்சாரக் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் தயாராகி வருகின்றது. அந்த 10 வீத அதிகரிப்பு என்பது சரியாக 10,000 கோடி ரூபா வாகும்.”- என்றார்.

# ஊடகவியலாளர் சு. இராமச்சந்திரனுக்கு நீதி கோரி பருத்தித்துறையில் இன்று கவனவீர்ப்பு போராட்டம்

வடமராட்சி - கரவெட்டியை சேர்ந்த ஊடகவியலாளர் சுப்பிரமணியம் இராமச்சந்திரன் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டு 19 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில், இந்த சம்பவத்திற்கு நீதி கோரி யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறையில் இன்று கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

ஊடக செயற்பாட்டின் பின்னர் வீடு திரும்பிய போது துன்னாலை கலிகை சந்தியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் வைத்து கடந்த 15.02.2007 அன்று இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட நிலையில், காணாமல் ஆக்கப்பட்டிருந்தார்.

19 ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் இராமச்சந்திரன் உயிருரோடு இருக்கின்றாரா இல்லையா என்பது தெரியாதுள்ளது.

ஊடகவியலாளர் சு.இராமச்சந்திரன் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்திற்கும், படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி கேட்டும் யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.









# சவூதி அரேபியா தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட இப்தார் நிகழ்வு!

(அபு அலா)

சவூதி அரேபியா இராச்சியத்தின் ஸ்தாபக தினத்தை முன்னிட்டு இராச்சியத்தின் தூதர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானி ஏற்பாடு செய்த இப்தார் நிகழ்வு நேற்று கொழும்பு ஐடிசி ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தநிகழ்வுக்குமுன்னாள்ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதி அமைச்சர் முனீர் முழப்பர், பிரதி சபாநாயகர் வைத்தியர் றிஸ்வி சாலி, அமைச்சர் இராமலிங்கன் சந்திரசேகர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரிஷாத் பதியுதீன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.உதுமாலெப்பை, ஆதம்பாவா, இராசமாணிக்கம் சாணக்கியன், முஜிபுர் ரகுமான் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.














# கடைசி லீக்கில் ஆஸி. வெற்றி

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் கடைசி லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி ஓமானை இலகுவாக வீழ்த்தியது.

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 40ஆவது லீக் ஆட்டம் பல்லேகலே மைதானத்தில் நேற்றிரவு நடந்தது.

இதில் ஆஸ்திரேலியா, ஓமன் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆஸ்திரேலியா அணி, பந்துவீச்சைத் தெரிவு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய ஓமன் அணி 16.4 ஓவர்களில் 104 ஓட்டங்களுடன் சுருண்டது.

அந்த அணி சார்பாக ஆகக்கூடுதலாக வாசிம் அலி 32 ஓட்டங்களைச் சேர்த்தார்.

ஆஸ்திரேலியா சார்பாக பந்துவீச்சில் அடம் ஜாம்பா 4 விக்கெட்டுகளையும், மெக்ஸ்வெல், பார்ட்லெட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் 105 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற எளிய இலக்கு நோக்கிக் களமிறங்கிய ஆஸ்திரேலியா, 9.4 ஓவர்களில் ஒரு விக்கெட் இழப்புக்கு 108 ஓட்டங்களைச் சேர்த்து அபார வெற்றி பெற்றது.

மிட்சல் மார்ஷ் 33 பந்துகளில் 64 ஓட்டங்களைக் குவித்தார். இதன்மூலம் 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியா அபார வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் நாயகனாக ஆஸ்திரேலியாவின் அடம் ஜாம்பா தெரிவானார்.

இவ்விரு அணிகளும் ஏற்கனவே சுப்பர் - 8 சுற்றுக்கான தகுதியை இழந்து வெளியேறிவிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**குழு - பி (புள்ளிப்பட்டியல்)**

| | அணி | போ | வெ | தோ | ச | மு.அ. | பு | ஓ.ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சிம்பாப்வே | 4 | 3 | 0 | 0 | 1 | 7 | 1.506 |
| 2 | இலங்கை | 4 | 3 | 1 | 0 | 0 | 6 | 1.741 |
| 3 | ஆஸ்திரேலியா | 4 | 2 | 2 | 0 | 0 | 4 | 1.523 |
| 4 | அயர்லாந்து | 4 | 1 | 2 | 0 | 1 | 3 | 0.150 |
| 5 | ஓமன் | 4 | 0 | 4 | 0 | 0 | 0 | -4.845 |






# சுப்பர்-8 அட்டவணை

| குழு | அணி | | அணி | நாள் | திகதி | நேரம் | மைதானம் |
|---|---|---|---|---|---|---|---|
| குழு-02 | நியூஸிலாந்து | எதிர் | பாகிஸ்தான் | சனி | 21 பெப் | 6 பிற்பகல் | ஆர்.பிரேமதாச இலங்கை |
| குழு-02 | இலங்கை | எதிர் | இங்கிலாந்து | ஞாயிறு | 22 பெப் | 2.30 பி.பகல் | பல்லேகல இலங்கை |
| குழு-01 | இந்தியா | எதிர் | தெ.ஆபிரிக்கா | ஞாயிறு | 22 பெப் | 6 பிற்.பகல் | அஹமதாபாத் இந்தியா |
| குழு-01 | சிம்பாப்வே | எதிர் | மே.இ.தீ. | திங்கள் | 23 பெப் | 6 பிற்பகல் | மும்பை இந்தியா |
| குழு-02 | இங்கிலாந்து | எதிர் | பாகிஸ்தான் | செவ்வாய் | 24 பெப் | 6 பிற்பகல் | பல்லேகல இலங்கை |
| குழு-02 | இலங்கை | எதிர் | நியூஸிலாந்து | புதன் | 25 பெப் | 6 பிற்பகல் | ஆர்.பிரேமதாச இலங்கை |
| குழு-01 | மே.இ.தீ. | எதிர் | தெ.ஆபிரிக்கா | வியாழன் | 26 பெப் | 2.30 பி.பகல் | அஹமதாபாத் இந்தியா |
| குழு-01 | இந்தியா | எதிர் | சிம்பாப்வே | வியாழன் | 26 பெப் | 6 பிற்பகல் | சென்னை இந்தியா |
| குழு-02 | இங்கிலாந்து | எதிர் | நியூஸிலாந்து | வெள்ளி | 27 பெப் | 6 பிற்.பகல் | ஆர்.பிரேமதாச இலங்கை |
| குழு-02 | இலங்கை | எதிர் | பாகிஸ்தான் | சனி | 28 பெப் | 6 பிற்பகல் | பல்லேகல இலங்கை |
| குழு-01 | சிம்பாப்வே | எதிர் | தெ.ஆபிரிக்கா | ஞாயிறு | 01 மார்ச் | 2.30 பிற்பகல் | டெல்லி இந்தியா |
| குழு-01 | இந்தியா | எதிர் | மே.இ.தீவுகள் | ஞாயிறு | 01 மார்ச் | 6 பிற்பகல் | கொல்கத்தா இந்தியா |





# வடக்கின் சீரற்ற ஆசிரிய வளப் பரவலாக்கத்தை விரைந்து சீர்ப்படுத்துமாறு ரவிகரன் கோரிக்கை

(பா.சதீசன்)

வடக்கு மாகாணத்தின் சீரற்ற ஆசிரிய வளப் பரவலாக்கத்தினால் வன்னிப் பிராந்தியத்திலுள்ள மாணவர்களின் கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்படுகின்றன எனச் சுட்டிக்காட்டிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், எனவே சீரற்ற ஆசிரிய வளப் பரவலாக்கத்தை விரைந்து சீர்பபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

வடக்குமாகாண ஆளுநர் ஊடாக வடக்கு மாகாணத்தில் நிலவும் சீரற்ற ஆசிரிய வளப் பற்றாக்குறையைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளரால் இதன்போது பதில் வழங்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் குழு அறையில் நேற்று இடம்பெற்ற கல்வி, ஆளணி மற்றும் மனித மூலதனம் பற்றிய துறைசார் மேற்பார்வை குழுக்கூட்டத்திலேயே இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தஜ கூட்டத்தில் தம்மால் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையில் உள்ளீர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கான அறிவித்தல் கடந்த 2026.02.02 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி ஊடாக வெளியாகியது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் கர்நாடக சங்கீதம், இந்து நாகரீக பாடங்களில் திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வடமாகாணத்துக்கான விண்ணப்பம் கோரப்படாமலிருந்தது.

இந்நிலையில் கடந்த 17.02.2026 அன்று வடமாகாணத்தில் கர்நாடக்சங்கீதம் மற்றும் இந்துநாகரீக பாடங்களுக்கான ஆசிரிய நியமன விண்ணப்பங்கள் கோரப்படவேண்டுமென கல்வி அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தேன்.

இத்தகையசூழலில் கடந்த 18.02.2026ஆம் திகதிய வர்த்தமானி மூலம் வடமாகாணத்திற்கு இந்து நாகரீகபாடத்திற்கான ஆசிரிய நியமன



விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. எனவே அதற்கான கல்வி அமைச்சிற்கு அந்தக் கூட்டத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்திருந்தேன்.

எனினும் மாகாண அடிப்படையில் இந்துநாகரீக பாடத்திற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட 125 ஆசிரியர்களில் 93 ஆசிரியர்களே தற்போதிருப்பதாக வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் புள்ளிவிவரம் சுட்டிக்காட்டுவதையும், இந்து நாகரீக பாடத்தில் வடமாகாணத்தில் 75சதவீத ஆசிரியர்களே காணப்படுகின்றமையையும் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தேன்.

மேலும் யாழ்ப்பாணத்தில் 89சதவீத ஆசிரியர்கள் காணப்படுகின்ற போதும் முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் 50சதவீத ஆசிரியர்கள், வவுனியா மாவட்டத்தில் 64சதவீத ஆசிரியர்களே உள்ளார்கள் என்பதை எடுத்துக்கூறியமையுடன், இந்தப் புள்ளிவிவரம் வடமாகாணத்தில் சீரற்ற ஆசிரியர் வளப்பரவலாக்கத்தை வெளிக்காட்டுகிறது என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

அதேவேளை வடமாகாணத்தில் கர்நாடக சங்கீதத்திற்குரிய ஏற்றுக்கொளளப்பட்ட ஆளணி 476. தற்போதுள்ள ஆளணி 506.

அந்தவகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 132சதவீதமான கர்நாடகசங்கீத ஆசிரியர்களும், கிளிநொச்சி 92சதவீதமான ஆஙிரியர்களும், மன்னார் 72 சதவீதமான ஆசிரியர்களும், வவுனியா 60சதவீத ஆசிரியர்களும், முல்லைத்தீவு 85சத வீத ஆசிரியர்களும் காணப்படுகின்றனர்.

கர்நாடக சங்கீத பாடத்திற்கு வடமாகாணத்தில் 30 ஆசிரியர்கள் மிகையாக உள்ள போதும், யாழ்ப்பாணத்தில் மட்டும் 81 ஆசிரியர்கள் மிகையாக உள்ளனர். ஆனால் வன்னிப் பெருநிலப்பரப்பில் உள்ள 6 கல்வி வலயங்களில் 46 ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர். இது வன்னிமாவட்ட பிள்ளைகளுக்கு நேரும் அநீதி என்பதையும் அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இத்தகைய சூழலில் வன்னியிலுள்ள எமது பிள்ளைகள் பாடத்திற்கு ஆசிரியர்கள் இன்றி கலைத்திறன் பெற வழியற்று இரும்நிலையில், யாழ்ப்பாணத்தில் 81 கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் மிகையாக உள்ளனர் என்பவற்றைச் சுட்டிக்காட்டி இந்தச் சமச்சீரற்ற வளப்பரவலாக்கத்தை விரைந்து சீர்ப்படுத்துமாறும் வலியுறுத்தியிருந்தேன்.

மேலும் முல்லைத்தீவில் 08 கர்நாடக சங்கீத ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில் 16 இற்கும் மேற்பட்ட கர்நாடக சங்கீத பட்டதாரிகள் முல்லைத்தீவில் மட்டும் உள்ளார்கள் என்பதைச் சுட்டிக்காட்டியமையுடன், கர்நாடக சங்கீதத்திற்கான ஆசிரிய ஆள்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டால் முல்லைத்தீவு மாவட்டத்தின் தேவையை முல்லைத்தீவு மாவட்ட ஆளணியைக் கொண்டே நிறைவு செய்ய இயலும் என்பதையும் இதன்போது கல்வி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தேன்.

எது, எவ்வாறாயினும் வடமாகாணத்தில் காணப்படும் சமச்சீரற்ற ஆசிரியவளப் பரவலாக்கத்தை விரைந்து சீர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதை இதன்போது மீண்டும் மீண்டும் வலியுறுத்தியிருந்தேன்.

இந்நிலையில் இந்த சீரற்ற ஆசிரிய வளப் பரவலாக்க விடயத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சிலேயே குறைபாடுகள் இருப்பதாக மேலதிக செயலாளர் இதன்போது தெரிவித்தார்.

எனவே தாம் வடமாகாண ஆளுநருக்கு தெரியப்படுத்தி இந்த சமச்சீரற்ற ஆசிரியவளப் பரவலாக்கத்தைச் சீர்செய் நடவடிக்கை மேற்கொள்வார் எனக் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் தமக்கு பதில் வழங்கினார் எனவும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன்




# இன்று உலகத் தாய்மொழித் தினத்தை ஒட்டி அனைவரையும் அணி திரள சஜித் அழைப்பு



உலகத் தாய்மொழித் தினம் இன்று பெப்ரவரி 21ஆம் திகதி கொண்டாடப் படுகிறது. அதற்காக நாட்டு மக்கள் அனைவருக்கும் ஒரு செய்தியை அனுப் புவதில் தாம் மகிழ்ச்சி அடைகிறார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருக்கின்றார்.

உலகத் தாய்மொழித் தினத்தை ஒட்டி "இலங்கை அடையாளத்தைஜ் கட்டியெழுப்ப ஒன்றிணைவோம்!" என்ற தலைப்பில் அவர் அனுப்பியுள்ள செய் தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

ஒரு சமூகத்தின் தாய்மொழி என்பது அந்த சமூகத்தின் அடையாளத்தை உறுதிப்படுத்தும் முதன்மையான காரணியாக அங்கீகரிக்கப்படுகிறது. மொழி என்பது ஒரு சமூகத்தின் கலாசார மதிப்புகளை முன்னோக்கி கொண்டு செல்லும் முக்கிய காரணி என்று மொழியியல் அறிஞர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர்.

இலங்கையும் பல்வகை, பன்மொழி சமூகமாக விளங்கும் தனித்துவமான நாடாகும். நம் நாட்டில் வாழும் 18க்கும் மேற்பட்ட இன மக்கள் பல்வேறு மொழிகளை தாய்மொழியாக பயன் படுத்துகின்றனர். எனினும், இது தற் போது போதுமான கவனம் பெறாத விடயமாகவே உள்ளது. அந்த இன மக்கள் பயன்படுத்தும் மொழிகளில் பல்வேறு கலாசார சிறப்பியல்புகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்காசாரங்கள் மற்றும் அந்தந்த இன குழுக்களுக்கே உரிய தனித்துவ மான மதிப்பீடுகள் பலவற்றை நாம் இனங்கண்டுகொள்ள முடியும்.

அந்தக் கலாசார சிறப்பியல்புகள் நம் வரலாற்றின் பல்வேறு பரிமாணங் கள் குறித்து நமக்கு கல்வி புகட்டுகின் றன. ஒரு வகையில் இது தனித்துவமான மக்கள் சமூகத்தின் கதையாடல் ஆகும். மொழி என்பது வெறும் தொடர்பாட லுக்கான வழி மட்டுமல்ல. ஒரு கலா சாரத்தின் குறுக்குவெட்டுத் தோற்றம் என்பதை இலங்கையின் பல்வேறு இன மக்கள் பயன்படுத்தும் தாய் மொழிகளை ஆய்வு செய்வதன் மூலம் நன்கு உணரலாம்.

இவ்வாறு பல்வேறு நாடுகளின் மக்களின் தாக்கத்தினால் உருவான மொழிகளில் நமக்கு கிடைப்பது வேற்று மையில் ஒற்றுமை. அது இலங்கையின் அடையாளமும் வலிமையும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நம் தாயகத்தில் வெளிப்படையாக பயன்படுத்தப்படும் மொழிகளோடு, வெளிப்படையற்று நிலைத்திருக்கும் மொழிகளையும் எதிர்காலத்திற்கு பாதுகாக்கும் பொறுப்பை உணர்ந்து நாம் அனைவரும் செயலாற்ற வேண் டும் என்பதை உலக தாய்மொழி தினத் தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உலக தாய்மொழி தினத்தை கொண் டாடுவதற்கான நிகழ்ச்சித்திட்டத்தை வகுப்பதில் அரசு தலையிட வேண்டும். ஏனெனில் இலங்கை அடையாளத்தை கட்டியெழுப்புவதற்கான அடித்தளம் அதில் உள்ளடங்கியுள்ளது. அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து அணிதிரள்வோம். - என்று உள்ளது.

# கொழும்பில் 'பாரதி'யின் நினைவேந்தல் கூட்டம்

மறைந்த மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்தின் ஓராண்டு நினைவை முன்னிட்டு எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நினைவஞ்சலி கூட்டமும் 'பாரதி ஒரு மனிதநேய ஊடகன்' என்ற நூலின் அறிமுக நிகழ்வும் நடைபெறவுள்ளது.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும், லண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடத்தும் இந்நிகழ்வுக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எஸ்.ஸ்ரீகஜன் தலைமை தாங்குவார். வரவேற்புரையை மூத்த ஊடகவியலாளர் அனந்த பாலகிட்ணர் நிகழ்த்துவார்.

தொடர்ந்து 'பாரதி ஒரு மனிதநேய ஊடகன்' என்ற மலரின் பிரதியை ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன் பெற்றுக்கொள்வார். தொடக்கவுரையை



சிரேஷ்ட விரிவுரையாளரும் மூத்த ஊடகவியலாளருமான திருமதி எம்.எஸ். தேவகௌரியும், சிறப்புரைகளை 'தினகரன்' பிரதம ஆசிரியர் எஸ்.செந்தில்வேலவர், 'முரசு' பத்திரிகையின் ஆசிரியர் என்.வித்தியாதரன், எக்ஸ்பிரஸ் நியூஸ் பேபர்ஸ் பிரைவட் லிமிட்டட்டின் பிரதம நிறைவேற்று அதிகாரி எம். செந்தில்நாதன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேஷன், முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். தொகுப்புரையை மூத்த ஊடகவியலாளர் அ.நிக்ஸன் நிகழ்த்தவுள்ளார்.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# போதைப்பொருள் கடத்தல் பெண் சந்தேகநபர் பொலிஸாரின் காவலில் இருந்து தப்பி ஓட்டம்!

## மூன்று பொலிஸ் அலுவலர்கள் பணி இடை நீக்கம்




தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு கல்கிஸை தலைமையகப் பொலிஸ் நிலையத்தில் இருந்த போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடைய பெண் சந்தேகநபர், தப்பியோடிய சம்பவம் தொடர்பில் இரண்டு பொலிஸ் சார்ஜண்ட்கள் மற்றும் ஒரு பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஆகியோர் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இரவு நேரப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய மற்றும் உதவிப் பணியாளராகக் கடமையாற்றிய இரண்டு சார்ஜண்ட்களும், சந்தேக நபரின் பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டிருந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிளுமே இவ்வாறு பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் எனொ பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்தொ பெண் சந்தேகநபர் போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில், கடந்த சில நாள்களுக்கு முன்னர் மொரட்டுவை விசேட அதிரடிப்படை முகாமின் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

ரத்மலானை மெலிபன் சந்தி பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட அவரிடமிருந்து 36,650 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டிருந்தது.

தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த இந்தச் சந்தேக நபர், கடந்த 16ஆம் திகதி தனது இயற்கை உபாதையைத் தீர்க்க வேண்டும் எனக் கூறி பெண் கான்ஸ்டபிளுடன் கழிவறைக்குச் சென்றபோது, அங்கிருந்து தப்பிச் சென்று வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏறித் தப்பியோடியுள்ளார்.

எவ்வாறாயினும், தப்பியோடிய சந்தேக நபர் 8 மணித்தியாலங்களுக்குப் பிறகு அன்றைய தினமே தலவத்துகொட கிம்புலாஎல பகுதியில் வைத்து விசேட பொலிஸ் குழுவினரால் மீண்டும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# கே.கே.எஸ். துறைமுக அபிவிருத்தியும் வடக்கு மறுமலர்ச்சியின் எதிர்காலமும்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அமைந்துள்ள காங்கேசன்துறை (கே.கே.எஸ்.) துறைமுகம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயசந்திரமூர்த்தி அண்மையில் அறிவித்துள்ளார்.

அவரின் அறிக்கையின்படி, துறைமுக வளாகத்தில் சிறப்பு கள ஆய்வு ஒன்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அனுர கருணாதிலக தலைமையில் நடைபெற்றது. இதில் பிரதியமைச்சர் பொறியியலாளர் ஜனித்த ருவன் கொடித்துவக்கு, யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைப்பாளர் கபிலன் சுந்தரமூர்த்தி, அமைச்சின் அதிகாரிகள், துறைமுக அதிகாரிகள் மற்றும் கடற்படை உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 50 ஏக்கர் பரப்பளவில் அபிவிருத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், புவியியல், கடல்சார் மற்றும் கட்டமைப்பு அம்சங்கள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது.

இந்திய அரசின் நிதி ஆதரவுடன் இத்திட்டம் செயல்படுத்தப்படும் எனவும், கடல்சார் வர்த்தகம், வேலைவாய்ப்பு, முதலீடு மற்றும் பிராந்திய இணைப்பை வலுப்படுத்தும் வகையில் கே.கே.எஸ். வடக்கு மாகாணத்தை சர்வதேச வர்த்தக வலையமைப்புடன் இணைக்கும் வாயிலாக மாறும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இந்த அறிக்கை நம்பிக்கையூட்டுவதாக இருந்தாலும், நிறுவனத் தெளிவுத்தன்மை குறித்த கேள்விகள் எழுகின்றன. குறிப்பாக, அமைச்சகத்தின் சார்பில் எந்த அதிகாரப்பூர்வ செய்திக் குறிப்பும் வெளியிடப்படாதமை கவனிக்கத்தக்கது. இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படைக் கட்டமைப்புத் திட்டங்களுக்கு



- ராஜ் சிவநாதன் -

திட்டமிட்ட தகவல் பரிமாற்றம், காலக்கட்டங்கள், நிதி வெளிப்படைத்தன்மை மற்றும் அளவிடத்தக்க முன்னேற்ற கட்டங்கள் அவசியம். மக்கள் நம்பிக்கை கள ஆய்வுகளால் மட்டுமல்ல, கண்கூடும் முன்னேற்றத்தால்தான் உருவாகும்.

தற்போதைய அரசு பதவி ஏற்று இரு ஆண்டுகள் நெருங்கியுள்ள நிலையில், கே.கே.எஸ். துறைமுகம் தொடர்பாகவும், யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையம் தொடர்பாகவும் இதே போன்ற வாக்குறுதிகள் முன்பும் வழங்கப்பட்டுள்ளன. ஆனால் கணிசமான கட்டமைப்பு மாற்றங்கள் இன்னும் தென்படவில்லை. அடிக்கல் நாட்டும் விழாக்கள் மற்றும் அரசியல் அறிவிப்புகள் நடைமுறை செயலாக்கத்தால் மாற்றப்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

கே.கே.எஸ். துறைமுகம் ஒரு சாதாரண பிராந்திய துறைமுகமல்ல. அது வடக்கு மாகாணத்தின் பொருளாதார எழுச்சிக்கான முக்கிய கருவியாக அமையக்கூடியது. சரியான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டால், தென் இந்தியாவுடன் நேரடி சரக்கு இணைப்பை உருவாக்கலாம், வடக்கு வர்த்தகத்தின் கொழும்பு சார்பை குறைக்கலாம், மீன்பிடி, விவசாயம் மற்றும் சிறு தொழில்களுக்கு ஏற்றுமதி வாய்ப்புகளை அதிகரிக்கலாம், தொழில்துறை மறுமலர்ச்சியை ஆதரிக்கலாம், மேலும் வெளிநாட்டு வாழ் தமிழர்களின் முதலீடு மற்றும் வர்த்தக இணைப்புகளை வலுப்படுத்தலாம்.

இந்த வாய்ப்பை செயல்படுத்தத் தவறினால், கடந்த காலத்தில் ஏற்பட்ட தாமதங்களும் நிறைவேறாத திட்டங்களும் மீண்டும் தொடரும் அபாயம் உள்ளது.

அபிவிருத்தி அரசியல் அறிக்கைகளின் அடிப்படையில் மட்டும் இருக்க முடியாது. அது நல்லாட்சியும் பொறுப்பும் கொண்ட நிர்வாக கட்டமைப்பில் அமைய வேண்டும்.

யாழ்ப்பாண வர்த்தக சங்கம் போன்ற குடியுரிமை அமைப்புகளும் வணிக நிறுவனங்களும், அமைச்சகத்திடம் அதிகாரப்பூர்வ விளக்கங்கள் கோருதல், கட்டப்படியான காலக்கட்டங்களை வலியுறுத்துதல், நிதிப் பயன்பாட்டை கண்காணித்தல், தனியார் துறையை ஒருங்கிணைத்தல் மற்றும் காலாண்டு வெளிப்படையான அறிக்கைகளை கோருதல் போன்ற பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

வடக்கு மாகாண மக்கள் குழப்பத்தை அல்ல, தெளிவை விரும்புகின்றனர்.

கே.கே.எஸ். துறைமுக அபிவிருத்தி உண்மையிலேயே வடக்கு பொருளாதார மறுமலர்ச்சிக்கான திருப்புமுனையாக அமையக்கூடும். இந்திய நிதி ஆதரவு, புவியியல் முன்னிலை மற்றும் வளர்ந்து வரும் வர்த்தக வாய்ப்புகள் அனைத்தும் உள்ளன.

ஆனால் நம்பகத்தன்மை செயல்பாட்டால் மட்டுமே நிரூபிக்கப்படும்.

யாழ்ப்பாணம் மற்றும் வடக்கு மாகாண மக்கள் குறியீட்டு அரசியலை வேண்டவில்லை. அவர்கள் திட்டமிட்ட முன்னேற்றத்தையும், அளவிடத்தக்க செயல்பாட்டையும், அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார பங்குபற்றலையும் எதிர்பார்க்கின்றனர்.

கே.கே.எஸ். உண்மையான வாயி லாக மாற முடியும். ஆனால் அது உறுதியான செயலாக்கத்தின் மூலம் மட்டுமே சாத்தியம்.




# கொழும்பில் இடம்பெற்ற மகா சங்கத்தின் மாநாடு: பௌத்த சாசனத்தை பாதுகாக்க 10 அம்சப் பிரகடனம்

தற்காலத்தில் பௌத்த மதத்திற்கும் மகா சங்கத்தினருக்கும் எதிராக முன்னெடுக்கப்படும் அழுத்தங்கள் குறித்து நாட்டு மக்களைத் தெளிவுபடுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மகா சங்க மாநாடு நேற்று கொழும்பில் உள்ள பௌத்த மகா சம்மேளனத் தலைமையகத்தில் நடைபெற்றது.

இந்த மாநாட்டின் போது, பௌத்த சாசனம், பிக்குகள் மற்றும் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சமூக நெருக்கடிகளைத் தீர்ப்பதற்காக இலங்கையின் அனைத்து பிக்குகளும் பௌத்த தலைவர்களும் இணைந்து “சங்கப் பிரகடனம்” ஒன்றை வெளியிட்டனர்.

அனைத்து தேரர்களினதும் கையொப்பத்துடன் கூடிய இந்தப் பிரகடனம் விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் சிங்களத் துறைத் தலைவர் பேராசிரியர் அகலகட சிறி சுமன தேரர் தெரிவித்தார்.

இதன்போது வெளியிடப்பட்ட 10 அம்சங்களைக் கொண்ட சங்கப் பிரகடனம் பின்வருமாறு,

பௌத்த மதமும் அரசும் வரலாற்று ரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ளதால், நாட்டை வழிநடத்தும் உரிமையை பிக்குகளுக்கு வழங்க அரசு அங்கீகரிக்க வேண்டும்.

1972 மற்றும் 1978 ஆம் ஆண்டு அரசமைப்பின் படி பௌத்த சாசனத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

பிக்குகளுக்கும் மக்களுக்கும் இடையிலான உறவைச் சீர்குலைக்க சமூக ஊடகங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்கும் செயற்பாடுகளைத் தடுக்க வேண்டும்.

ஆட்சியாளர்கள் தசராஜ தர்மம் மற்றும் சத்தர சங்கிரஹ வஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் நாட்டை ஆள வேண்டும்.

புத்தர் சிலைகளுக்கு அவமதிப்பு ஏற்படும் வகையில் அரசாங்கமோ அல்லது வேறு தரப்பினரோ செயற்படக்கூடாது.

பிரிவெனா மற்றும் பாடசாலைக் கல்வியில் பௌத்த கல்விக் கொள்கைகளை உள்ளடக்கி ஒழுக்கமான தலைமுறையை உருவாக்க வேண்டும்.

தற்போது முடங்கியுள்ள புத்த சாசன அமைச்சையும் பௌத்த விவகாரத் திணைக்களத்தையும் வினைத்திறன் மிக்கதாக மாற்ற வேண்டும்.

பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்திற்காக நீதியான (தர்மமான) ஆட்சியை முன்னெடுக்க வேண்டும்.

பௌத்த தொல்பொருள்கள் மற்றும் விகாரைகள் தேசத்தின் சொத்துக்களாகக் கருதப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும்.

பிக்குகளைச் சமூக ஊடகங்கள் மூலம் அவமதிப்பதையோ அல்லது அவர்கள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதையோ அரசாங்கம் தடுத்து நிறுத்த வேண்டும்.

# அல் - குர்ஆன் தொடர்பான சிக்கல்களை நீக்கித்தாருங்கள்

## காதர் மஸ்தான் கோரிக்கை

அல்- குர்ஆன் தொடர்பான சிக்கல்களை நீக்கித்தருமாறு நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.


குர்ஆன் விடுவிப்பு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் கருத்து தெரிவித்திருந்தார். அதிலும் பாதுகாப்பு காரணங்களுக்காக குர்ஆன் தடுக்கப்படவில்லை என அவர் கூறியிருந்தார்.

அதேபோன்று உங்கள் குழுவை சார்ந்த சிலரின் நிர்ப்பந்தத்தினாலேயே தடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஆனால், இத்தகைய தடைகளை நீக்குவதற்காகவே மக்கள் உங்களுக்கு ஆணை வழங்கி தெரிவு செய்துள்ளனர். ஆகவே இவ்வாறு கூறுவதை விடுத்து, விரைவாக அதனை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்துக்கொள்வதாக அவர் கூறினார்.







# வவுனியாவில் 15 வயது மாணவி ஒருவரை காணவில்லை எனப் பொலிஸில் முறையீடு

(கி.வசந்தன்)

வவுனியாவில் 15 வயது மாணவி ஒருவரைக் காணவில்லை என முறைப்பாடு கிடைத்துள்ளதாக வவுனியா பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 15 வயதுடைய இந்த மாணவி கடந்த திங்கட்கிழமை வீட்டில் இருந்து வெளியேறிய நிலையில் வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தாயாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் டிலக்சிகா என்பவரே இவ்வாறு காணாமல் போனவர் ஆவார்.

இவர் தொடர்பாக தகவல் தெரிந்தோர் 0778060470 என்ற தொலைபேசி இலக்கத்துக்கோ அல்லது வவுனியா பொலிஸாருக்கோ தகவல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# டியூஷன் வகுப்புகள் 5 மணிக்கு முன் முடிவுறுத்த வேண்டும் உணவகங்கள் 3 மணிக்குப் பின்பே திறக்கப்பட வேண்டும்

## சாய்ந்தமருது பெரிய பள்ளியில் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுகூடித் தீர்மானம்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

றமழான் நோன்பு காலத்தில் சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களில் நோன்பின் மாண்புகளைப் பேணும் வகையிலும் ஒழுக்க விழுமியங்களை நடைமுறைப்படுத்தும் பொருட்டும் சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் கடந்த புதன்கிழமை இரவு விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.



பள்ளிவாசல் தலைவர் எம்.எம். முபாறக் ஹாஜியார் தலைமையில் கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஏ.ரி.எம். றாபி, சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆஷிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.ஜே.டி. சில்வா ஆகியோர் முன்னிலையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் அனைத்து பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், ஜம்மியதுல் உலமா சபையினர், வர்த்தக சங்கத்தினர், டியூட்ரிகளின் பொறுப்பாசிரியர்கள், உணவகங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது முக்கிய பல விடயங்கள் ஆராயப்பட்டு, அவை தொடர்பில் பல்வேறு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

குறிப்பாக இப்பிரதேசங்களில் செயற்படும் தனியார் கல்வி நிலையங்களில் மேலதிக வகுப்புகள் யாவும் மாலை 5.00 மணிக்கு முன்னதாக முடிவுறுத்தப்பட வேண்டும் எனவும் றமழானின் இறுதிப் பத்து நாள்களும் மேலதிக வகுப்புகள் எதுவும் நடத்தாமல், மாணவர்களுக்கு முழுமையாக விடுமுறை வழங்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இப்பிரதேசங்களில் செயற்படும் உணவகங்கள் யாவும் பிற்பகல் 3.00 மணிக்குப் பின்னரே வியாபாரத்திற்காக திறக்கப்பட வேண்டும் எனவும், தற்போது நடைபெறும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை நிறைவடையும் வரை பள்ளிவாசல்களில் அதான் (பாங்கு) தவிர்ந்த ஏனைய விடயங்களுக்கு வெளி ஒலிபெருக்கிப் பாவனையை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், பொதுவாக இரவு 11.00 மணிக்குப் பின்னர் ஒலிபெருக்கிப் பாவனையை முற்றாக தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவை உள்ளிட்ட அனைத்து தீர்மானங்களையும் முறையாக அமுல் படுத்துவதற்கு சம்மந்தப்பட்ட தரப்பினர் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க இணக்கம் தெரிவித்தனர்.

# நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 481 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் தகவல்



நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் 481 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனவும் 2025 ஆம் ஆண்டு 102 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் 598 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இதனைக் குறிப்பிட்டார்.

அதன்படி, கடந்த 10 ஆண்டுகளில்மாத்திரம் 481 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அவர் தெரிவித்தார்.

தொடருந்து உரையாற்றிய அவர், 2015 ஆம் ஆண்டு 43 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 476 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன என்று தெரிவித்தார்.

அத்துடன், 2016 ஆம் ஆண்டு 44 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 502 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன என அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

மேலும், 2017 ஆம் ஆண்டு 33 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 452 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

2018 ஆம் ஆண்டு 61 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 493 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

2019ஆம் ஆண்டு 38 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 481 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

2020ஆம் ஆண்டு 26 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 464 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

2021ஆம் ஆண்டு 22 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், 568 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

எனினும், இந்த பத்து ஆண்டுகளில் 2023 ஆம் ஆண்டே அதிக துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

அதன்படி, 2023 ஆம் ஆண்டு 81 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் 601 கொலை சம்பவங்களும் பாதிவாகியுள்ளன என்று அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

அதேபோன்று, 2024 ஆம் ஆண்டு 74 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் 515 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

2025 ஆம் ஆண்டு 102 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் 598 கொலை சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனவும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

# எரிவாயுத் தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக மார்ச் 12 முதல் விநியோகம் அதிகரிப்பு

நாட்டில் நிலவும் எரிவாயு தட்டுப்பாட்டுக்குத் தீர்வாக, எதிர்வரும் மார்ச் மாதம் 12 ஆம் திகதி முதல் சந்தைக்கு விநியோகிக்கப்படும் லிட்ரோ எரிவாயு கொள்கலன்களின் எண்ணிக்கையை அதிகரிக்க எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாள்களாக நிலவும் எரிவாயு தட்டுப்பாடு இன்றும் பல பகுதிகளில் காணப்பட்டது.

லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் ஆகிய இரு நிறுவனங்களின் எரிவாயு கொள்கலன்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக நுகர்வோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

பல இடங்களில் எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதற்காக நுகர்வோர் நீண்ட வரிசைகளில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

சந்தையில் தட்டுப்பாட்டை நீக்கத் தேவையான புதிய பதிவுகள் செய்யப்பட்டுள்ளன. இதன்படி, பெப்ரவரி மாதம் முடிவதற்குள் மூன்று எரிவாயு கப்பல்கள் இலங்கைக்கு வரவுள்ளதாக லிட்ரோ நிறுவனம் அறிவித்துள்ளது.




நேற்று காலையில் சில பகுதிகளுக்கு புதிய எரிவாயு கையிருப்புகள் கிடைக்கப்பெற்ற போதிலும், இன்னும் பல இடங்களுக்கு லிட்ரோ எரிவாயு கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

லாஃப்ஸ் எரிவாயு கொள்கலன்களை எதிர்வரும் பெப்ரவரி 26 ஆம் திகதி முதல் சந்தைக்கு விநியோகிக்கவுள்ளதாக அந்த நிறுவனம் தமக்கு அறிவித்துள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் ஹேமந்த சமரகோன் தெரிவித்துள்ளார்.

உள்நாட்டு எரிவாயு உற்பத்திக்காக 2012 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட உபகரணங்களை இதுவரை செயல்பாட்டுக்குக் கொண்டுவருவதற்கு தற்போதைய அரசாங்கமும் தவறியுள்ளதாக ஐக்கிய இணைந்த தொழிற்சங்கப் படை குற்றம் சாட்டியுள்ளது.

# பாலியல் கல்வி எதற்கு? ராஹுல தேரர் கேள்வி!



இலங்கையில் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவதன் அவசியம் குறித்து சிரேஷ்ட பௌத்த மதகுருவான பேராசிரியர் கோட்டப்பிட்டிய ராஹுல தேரர் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற சங்க மாநாட்டில் உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டார்.

பௌத்த மதம், மதகுருமார்கள் மற்றும் நாட்டின் கலாசார பாரம்பரியத்திற்கு எதிராக வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் குறித்து விவாதிக்க இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

“இந்த பாலியல் கல்வி என்பது என்ன?” என்று தனது உரையின் போது கேள்வி எழுப்பிய தேரர், பாடசாலைகளில் பாலியல் கல்வியை அறிமுகப்படுத்துவது அல்லது விரிவுபடுத்துவது குறித்த முன்மொழிவுகள் மீது தனது சந்தேகத்தை வெளியிட்டார்.

கடந்த காலங்களில் இலங்கையர்கள் இத்தகைய முறையான கல்வித் திட்டங்கள் இல்லாமலேயே கலாசார விழுமியங்கள் மற்றும் அடக்கத்தைப் பேணி, வெற்றிகரமான திருமண வாழ்க்கை மற்றும் பெரிய குடும்பங்களை உருவாக்கியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வித முறையான போதனைகளும் இன்றி முந்தைய தலைமுறையினர் நிலையான குடும்ப வாழ்க்கையை நடத்தியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்களுக்கு எதிராக நடவடிக்கை




விசா ஆலோசனை சேவை என்ற பெயரில் இயங்கி வந்த போலி வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்களுக்கு எதிராக அரசாங்கம் கடும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

நாடு முழுவதும் இடம்பெற்ற பாரிய நிதி மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளைத் தொடர்ந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசேட புலனாய்வுப் பிரிவால் சோதனைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

ஜாஎல மற்றும் கந்தானைப் பகுதிகளில் ருமேனியாவில் லொறி சாரதி வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இருவரிடமிருந்து 36 லட்சம் ரூபாவை மோசடி செய்த நிறுவனம் ஒன்று முற்றுகையிடப்பட்டது.

இதன் போது அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டதோடு, போலி ஒப்பந்த ஆவணங்கள் மற்றும் கணினி என்பன கைப்பற்றப்பட்டன.

சந்தேகநபர் வெலிசர நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்த மோசடிக்கு உதவிய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து முறைப்பாட்டாளர்களின் கடவுச்சீட்டுகளும் மீட்கப்பட்டுள்ளன.

அவர் எதிர்வரும் பெப்ரவரி 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நீர்கொழும்பில் சமூக ஊடகங்கள் ஊடாக ஐரோப்பா மற்றும் கனடாவில் வேலை பெற்றுத் தருவதாக விளம்பரம் செய்து, 55 லட்சம் ரூபாவை மோசடி செய்த மற்றுமொரு நிலையம் சுற்றிவளைக்கப்பட்டது.

கனடாவில் பராமரிப்பாளர் வேலை தருவதாகக் கூறி பணத்தைப் பெற்று ஏமாற்றிய அதன் உரிமையாளர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

எந்தவொரு வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காகவும் பணத்தைச் செலுத்துவதற்கு முன்னர், இந்த நிறுவனம் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துமாறு அதிகாரிகள் பொதுமக்களைக் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# நாம் மீண்டும் ஆட்சிக்கு வருவோம்: சட்டப்பேரவையின் முதல்வர் உரை



"மீண்டும் வந்து ஆட்சி அமைப்போம். தமிழக மக்களுக்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவோம்."

–இவ்வாறு சட்டப்பேரவையின் நிறைவு நாள் கூட்டத்தில் பேசிய முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் 2026-27 பட்ஜெட் கூட்டத்தொடர் நேற்று நிறைவடைந்தது. இது நடப்பு 16 ஆவது சட்டப்பேரவையின் கடைசி நாள் கூட்டம் ஆகும். இதில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"கடந்த 5 ஆண்டு காலத்தில் 5 பட்ஜெட்கள் அளிக்கப்பட்டுள்ளன. அமைச்சர்கள் எம்ஆர்கே. பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு ஆகியோர் சிறப்பான பட்ஜெட், பதிலுரை வழங்கியுள்ளனர்.

இதன் தொடர்ச்சியை, அடுத்த 2 மாதத்தில் மீண்டும் வந்து, நிச்சயம், இன்னும் கூடுதலாக, வேகமாக தொடர்வோம். 5 ஆண்டு அனுபவத்தால் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இன்னும் வலிமை பெற்றுள்ளேன். தமிழகத்தை இன்னும் ஏற்றம் பெற வைக்க நம்பிக்கையோடு உழைக்க வேண்டும் எனும் ஊக்கம், வல்லமையும் பெற்றுள்ளேன்.

தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளையும் எனது தொகுதியாகவே நினைத்து, எங்களுக்கு வாக்களித்தவர்கள், வாக்களிக்காதவர்கள் என்று பிரித்துப் பார்க்காமல் செயலாற்றி உள்ளேன். இந்த மிகப் பெரிய வாய்ப்பைத் தந்த தமிழக மக்கள், என்னைத் தேர்ந்தெடுத்து பேரவைக்கு அனுப்பிய கொளத்தூர் தொகுதி மக்களுக்கு மனமார்ந்த நன்றி.

கடந்த 2021இல் பேரவை நூற்றாண்டு விழாவுக்கு வந்து, முன்னாள் முதல்வர் கருணாநிதியின் படத்தை திறந்து வைத்த அன்றைய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்துக்கு நன்றி. ஆளுநருக்கும், எனக்கும் தனிப்பட்ட முறையில் எந்த வித கருத்து வேறுபாடும் கிடையாது. தமிழர்களின் சுயமரியாதை எள் முனையளவு சீண்டப்பட்டாலும், அது யாராக இருந்தாலும், எதிர்க்குரல் கொடுக்கும் திசையில் முதல் நபராக இருப்பேன். தமிழர் பண்பாட்டை மனதில் கொண்டு, ஆளுநருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டுகளாக அமைதி, கண்ணியம், கட்டுப்பாட்டோடு பேரவையை சிறப்பாக நடத்திய பேரவைத்தலைவருக்கு பாராட்டுகள், வாழ்த்துகள். பேரவையில் அனல் பறக்கும் விவாதம் நடைபெறும் சூழலில் தனது அனுபவத்தாலும், அபார நினைவாற்றலாலும் அமைதிப்படுத்தக்கூடிய அவை முன்னவர் துரைமுருகன் விரைந்து உடல்நலம் பெற்று வரவேண்டும். அவருக்கும் எனது நன்றிகள்.

மக்கள் பணியிலும், தேர்தல் பணியிலும் என்னில் ஒரு பாதியாய், இயக்கத்தின் வளர்ச்சிக்கும், ஆட்சியின் சிறப்புக்கும் உறுதுணையாக நிற்கும் துணை முதல்வருக்கும் பாராட்டுகள், நன்றிகள். அரசின் திட்டங்கள் சிந்தாமல் சிதறாமல் மக்களிடம் சென்றடைய முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அமைச்சர்கள், தலைமைச் செயலர், அனைத்து துறைகளின் செயலர்கள், காவல் துறையினர் அனைவருக்கும் நன்றி.

குறைகளைச் சொல்பவர்கள் நம் முன்னேற்றத்துக்கு சிறகுகளைத் தருபவர்கள். அந்த வகையில், அரசுக்கு தக்க யோசனைகள் கூறுவதிலும், குறைகளைச் சுட்டிக்காட்டுவதிலும், கண்ணியமான முறையை கடைபிடித்து, ஒத்துழைப்பு நல்கிய எதிர்க்கட்சித் தலைவருக்கும், இதர கட்சித் தலைவர்களுக்கும், எங்கள் சாதனைகளுக்கெல்லாம் தோளோடு தோள் நின்ற தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும் நன்றி.

இந்த 5 ஆண்டுகளில் எனக்கும், என் மனசாட்சிக்கும் மட்டுமே கட்டுப்பட்டு உழைத்துள்ளேன். இன்னும் உழைக்க காத்திருக்கிறேன். நாளை நாங்கள் அமைக்கும் திராவிட மொடல் 2.0 ஆட்சி, எங்கள் சாதனைகளை நாங்களே விஞ்சும் அளவுக்கு இருக்கும். மீண்டும் வந்து ஆட்சி அமைப்போம். தமிழக மக்களுக்கான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்துவோம்." என்று தெரிவித்தார்.

# பட்ஜெட் மீதான விவாதத்துக்கு பதிலுரை: அ.தி.மு.க - பா.ஜ.க கூட்டணி புறக்கணிப்பு



பட்ஜெட் மீதான விவாதத்துக்கு அமைச்சர்கள் அளித்த பதிலுரையை அ.தி.மு.க, பா.ஜ.க, பா.ம.கவின் எம்.எல்.ஏக்கள் புறக்கணித்தனர்.

சட்டபேரவையில் நேற்று இடைக்கால பட்ஜெட் மீதான விவாதத்துக்கு அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் பதில் அளித்துப் பேசினர். ஆனால், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் அமைச்சர்களின் பதிலுரையைப் புறக்கணித்தனர். அவர்கள் சட்டபேரவைக்கு வரவில்லை.

பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் மற்றும் பா.ஜ.கவின் எம்.எல்.ஏக்கள் சட்டப்பேரவைக்கு வந்து, வருகைப் பதிவேட்டில் கையெழுத்து போட்டுவிட்டு, பேரவை நிகழ்வுகளைப் புறக்கணித்தனர். அதேபோல, பா.ம.க (அன்புமணி ஆதரவு) எம்.எல்.ஏக்களும் பதிலுரையை புறக்கணித்தனர்.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பா.ம.கவின் எம்.எல்.ஏ. வெங்கடேஷ் கூறும்போது,

"பட்ஜெட்டில் புதிய அறிவிப்புகளும் இல்லை. இன்றைய பதில் உரையிலும் எதுவும் இருக்காது என்ற காரணத்தால், பா.ம.க. புறக்கணித்துள்ளது. அரசு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் போராடி வரும் சூழலில், அவர்களுக்கான எந்த அறிவிப்பும் பட்ஜெட்டில் இல்லை என்ற காரணத்தால், பதில் உரையை புறக்கணித்தோம்." – என்றார்.

# ஈரானின் உச்சக்கட்ட நெருக்கடி: இக்கட்டான நிலையில் அலி கமேனி



ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி, தனது 36 ஆண்டுகால அதிகாரத்தில் இதற்கு முன்னர் பல உள்நாட்டு கலவரங்களையும் சர்வதேச அழுத்தங்களையும் முறியடித்துள்ளார்.

இருப்பினும், தற்போது அவர் தனது ஆட்சியின் மிகக் கடுமையான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்.

அமெரிக்காவின் வான்வழித் தாக்குதல் அச்சுறுத்தல்களைத் தவிர்ப்பதற்காக ஈரானின் தூதுவர்கள் தீவிர பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், பிராந்தியத்தில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளன.

சர்வதேசத் தடைகளால் முடங்கியுள்ள பொருளாதாரத்தினால் ஈரான் மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த ஜனவரியில் வெடித்த பாரிய போராட்டங்கள் ஒடுக்கப்பட்டபோது ஆயிரக்கணக்கான உயிர்கள் பலியாகின.

கடந்த ஆண்டில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்கா நடத்திய தாக்குதல்களில் ஈரானின் மிக முக்கியமான அணுசக்தி மற்றும் ஏவுகணைத் தளங்கள் அழிக்கப்பட்டன.

ஈரானின் பிராந்தியக் கொள்கைகள் தற்போது சிதைவடைந்துள்ளன.

அதன் நீண்டகால நட்பு நாடுகளும், நிழல் அமைப்புகளும் பலவீனமடைந்துள்ளன அல்லது முற்றாக அழிக்கப்பட்டுள்ளன.

86 வயதான அலி கமேனியின் இஸ்லாமிய குடியரசு மீதான தீவிர பற்றும், மேற்கத்திய நாடுகளுக்கு எதிரான விட்டுக்கொடுக்காத பகையும், பேச்சுவார்த்தைகளில் அவர் கையாளும் தந்திரங்களும் இனிவரும் காலங்களில் அந்தப் பிராந்தியத்தின் விதியைத் தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# சரிவை நோக்கிச் செல்லும் அமெரிக்கா: டிசம்பரில் வீழ்ச்சியடைந்த பொருளாதாரம்

அமெரிக்கப் பொருளாதாரத்தின் எதிர்காலப் போக்கை கணிக்கும் முக்கிய குறிகாட்டிகள், கடந்த டிசம்பர் மாதத்தில் சரிவைக் கண்டுள்ளதாக 'Conference Board' தெரிவித்துள்ளது.

இது தொடர்ச்சியாக மூன்றாவது மாதமாக ஏற்பட்டுள்ள வீழ்ச்சியாகும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் இறுதி மாதத்தில் இந்த வணிகக் குறிகாட்டிகள் 0.2 வீதம் சரிந்தன.

இதற்கு முன்னதாக நவம்பரில் 0.3 வீதம் வீழ்ச்சியும், ஒக்டோபரில் 0.2 வீதம் வீழ்ச்சியும் பதிவாகியிருந்தது.

எனினும், 2025 இன் முதல் பாதியில் காணப்பட்ட 2.8 வீதம் வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், இரண்டாம் பாதியில் இந்த சரிவு வீதம் 1.2 வீதமாக குறைந்துள்ளது.

கடந்த ஆண்டில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த அதிரடி இறக்குமதி வரி விதிப்புகளால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை குறைந்து, 2026 இன் ஆரம்பத்தில் பொருளாதாரத் தரவுகள் எதிர்பார்த்ததை விடச் சிறப்பாகவே உள்ளன.

கட்டட அனுமதிப் பத்திரங்களின் அதிகரிப்பு மற்றும் நிதித்துறையின் பங்களிப்பு சாதகமாக இருந்தாலும், நுகர்வோர் எதிர்பார்ப்புகள் பலவீனமாக உள்ளமை மற்றும் உற்பத்தித் துறையில் புதிய குறியீடு சரிந்தமை ஆகியவை வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும் என அந்த சபையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் வேலைவாய்ப்பற்றோருக்கான கோரிக்கைகள் அதிகரித்தமையும் இதில் தாக்கம் செலுத்தியுள்ளன.


2025 இன் நான்காம் காலாண்டு மற்றும் 2026 இன் தொடக்கத்தில் பொருளாதார வளர்ச்சி மெதுவாகவே இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2.1 வீதமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது (கடந்த ஆண்டு இது 2.2 வீதமாக கணிக்கப்பட்டிருந்தது).

எனினும், வரிக்குறைப்பு மற்றும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் காரணமாக பொருளாதாரம் மீண்டும் புத்துயிர் பெறும் என ஒரு சில பொருளாதார நிபுணர்கள் நம்புகின்றனர்.

மேலும், ஜனவரி மாதத்தில் வீடுகள் விற்பனை 0.8 வீதம் சரிந்துள்ளது.

வட்டி விகிதங்கள் 6 வீதத்தை நெருங்குவதால், சுமார் 5.5 மில்லியன் குடும்பங்கள் கடன் பெறத் தகுதி பெற்றிருந்தாலும், புதிய கொள்வனவாளர்கள் சந்தைக்கு வர இன்னும் காலம் எடுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இன்றைய ராசி பலன்கள்- 21.02.2026




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும்.




இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையும் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.




இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும்.




உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.

இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

# இன்றைய ராசி பலன்கள்- 21.02.2026




இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.




இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் தன்னபிக்கை மற்றும் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.




ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன் படுத்திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும்.




இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.





# அம்பாறையில் தொடரும் மழையினால் பெரும்போக நெல் அறுவடை பாதிப்பு!

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

அம்பாறை மாவட்டத்தில் பல இடங்களில் பரவலாக பெய்து வரும் கனமழை காரணமாக பெரும்போக நெல் அறுவடையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திற்குட்பட்ட சம்மாந்துறை, வளத்தாப்பிட்டி, மல்வத்தை, மஜீட்புரம் ஆகிய விவசாய பிரதேசங்களில் அறுவடைப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில காலமாக தொடர்ச்சியாக செய்து வரும் மழை காரணமாக நெல் அறுவடை செய்ய முடியாமல் காலம் பிற்போடப்படுவதால் வயல் நிலங்களில் காணப்படும் நெற்கதிர்கள் முறிந்து வீழ்ந்து நீரில் மூழ்கி பழுதடைய கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதுவரையில் அறுவடை செய்யப்பட்டு வீதியோரங்களிலும், திறந்தவெளி மைதானங்களிலும் கொட்டி வைக்கப்பட்டு, காய வைக்கப்படுகின்ற நெல், தொடர்ச்சியாகவும் அவ்வப்போதும் பெய்கின்ற மழையில் நனைவதால் அவை ஈரப்பதத்துடன் காணப்படுகின்றன். இதனால் இந்த நெல் முளைக்கக் கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், நீண்ட காலம் களஞ்சியப்படுத்த முடியாதுள்ளதை சந்தர்ப்பமாக பயன்படுத்தி தனியார் வியாபாரிகள் நெல்லின் விலையைக் கடுமையாக குறைத்து விற்பனைக்கு கேட்கின்றனர் எனவும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.